Malaysia Nanban
8/9/17 article & ad.

# FIMM - நாடு முழுவதும் விழிப்புணர்வு இயக்கம்

## முதலீட்டாளர்களுக்கு விளக்கம்

கோலாலம்பூர், செப். 8- மலேசிய முதலீட்டு நிர்வாகிகள் சம்மேளனத்தின் (FIMM) பங்கு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தில் அச்சம்மேளனம் முதல் முறையாக முழு நிலையிலான பொதுச்சேவை இயக்கம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

யூனிட் டிரஸ்ட் (யூ.டி.) மற்றும் தனியார் பணி ஓய்வு திட்டம் (பி.ஆர்.எஸ்.) ஆகியவற்றில் முதலீட்டாளர்கள் கொண்டுள்ள ஆர்வத்திற்கு நாங்கள் முதன்மை இடம் வழங்குகிறோம் என்று கூறுகிறார் சம்மேளனத்தின் புதிதாக நியமனம் செய்யப்பட்ட தலைமை செயல்முறை அதிகாரி டத்தோ நொராஸாருடின் அபு தாலிப்.

இன்றையச் சூழலில் அதிகமான மக்கள் முதலீடு செய்வதில் ஆர்வம் கொண்டுள்ளனர்.

ஆனால், யூனிட் டிரஸ்ட் மற்றும் பணி ஓய்வு திட்டங்களில் முதலீடு செய்யும் போது பெரும்பாலான சூழலில் சரியான

FIMM
Federation of Investment Managers Malaysia

நடைமுறைகளை அவர்கள் பின்பற்றுவதில்லை.

முதலீடுகளுக்காக வெறுமனே பணத்தை எடுத்துக்கொடுப்பதும், முறையாக பூர்த்தி செய்யப்படாத ஆவணங்களில் கையெழுத்திடுவதும் அவர்களுக்கு பழக்கமான ஒன்றாகி விட்டது.

இந்நிலைமை தொடரக்கூடாது. முதலீட்டாளர் என்ற முறையில் அவர்களின் உரிமைகள் பற்றி கற்றுக்கொடுப்பதற்கும் யூனிட் டிரஸ்ட் நிறுவனங்களை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள அதிகாரத்துவ ஒருங்கிணைப்பு வாரியமாக இச்சம்மேளனம் செயல்படுகிறது என்பதை மக்களுக்கு உணர்த்துவதற்கும் இந்த இயக்கம் ஒரு தளமாக செயல்படும் என்று அவர் கருத்துரைத்தார்.

முதலீட்டாளர்களின் நலனே எங்கள் முன்னுரிமை என்பதே இந்த இயக்கத்தின் கருப்பொருளாகும். கடந்த செப்டம்பர் 4-ஆம் தேதி (2017) தொடங்கிய இவ்வியக்கம் 6 மாதங்களுக்கு நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும்.

இரண்டு கட்ட நடவடிக்கைகள் இதில் அடங்கும். ஒன்று, அங்கீகாரம் பெற்ற ஆலோசகர்களுடன் மட்டுமே செயல்படும்படி பொதுமக்களுக்கு கற்றுக்கொடுப்பது. இரண்டாவது, யூ.டி. மற்றும் பி.ஆர்.எஸ். திட்டங்களின் வழி சேமிப்பை முன்கூட்டியே தொடங்கும்படி மக்களை ஊக்குவிப்பது என்று டத்தோ நொராஸாருடின் விவரித்தார்.

இந்த 6 மாத காலத்தில் அனைத்து பிரதான ஊடகங்கள் வழியும் இவ்வியக்கம் மேற்கொள்ளப்படும். இது பற்றி www.fimm.com.my என்ற அகப்பக்கத்தில் பொதுமக்கள் மேல் விவரங்கள் பெறலாம்.


FIMI
Federation of Investment Manage
முதலீட்டாளரின் ஆர்வத்
எங்களின் முன்னுரி

# புத்திசாலியாக முதலீடு செய்யுங்கள்!

அங்கீகரிக்கப்பட்ட ஆலோசகர்களை மட்டும் நாடுங்கள்.

உங்கள் செல்வத்தை சரியான முறையில் பெருக்கும் கருவி முதலீடுதான்.
**யுனிட் டிரஸ்ட்** மற்றும் **தனியார் பணி ஓய்வு திட்டங்களில்**
விவேகமாக முதலீடு செய்யுங்கள்.




**யுனிட் டிரஸ்ட்** மற்றும் **தனியார் பணி ஓய்வு** விநியோகிப்பாளர்கள் பற்றி தெரிந்து கொள்ள வலம் வாருங்கள் www.fimm.co